**செ. கு. எண்**: 445 **நாள்**: 12.12.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 12.12.2012

சென்னை பெருநகர காவல், ஏழுகிணறு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. காமராஜ் அவர்கள் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், சோலூர்மட்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. கல்லன் அவர்கள் 7.12.2012 அன்று சேலம் மாவட்டம், மேச்சேரி அருகே தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், ஆரம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. துளசி அவர்கள் 8.12.2012 அன்று சென்னை, கிழக்குக் கடற்கரை சாலையில், கானாத்தூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப்படைப் பிரிவு முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. லெட்சுமிநாதன் அவர்கள் 6.12.2012 அன்று பணியில் இருக்கும் போது வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 8.12.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், பாலக்கரை போக்குவரத்து ஒழுங்கு பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் 8.12.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் மல்லாச்சிப்புரம் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. காமராஜ், திரு. கல்லன், திரு. துளசி, தலைமைக் காவலர் திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. லெட்சுமிநாதன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. காமராஜ், சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. கல்லன், திரு. துளசி, தலைமைக் காவலர் திரு. ராதாகிருஷ்ணன் மற்றும் வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்து, பலத்த காயமடைந்து உயிரிழந்த முதல் நிலைக் காவலர் திரு. லெட்சுமிநாதன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**